இங்கே, விமர்சனத்துக்கு பெறப்படும் புத்தகங்களிலிருந்து ஒரு பகுதி – ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக...

## ரண சிகிச்சை

உபாசனைகளில் தேவி உபாசனைக்கு நிகராக வேறு ஒன்றுமில்லை. ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமத்தைப் போன்ற துதிப்பாடலும் இல்லை. ஸௌந்தர்ய லஹரியில், "பவானித்வம் தாஸேமயி விதர த்ருஷ்டிம் ஸகருணாம்'' என்ற ஸ்லோகத்தில் ஆதிசங்கரர் விளக்கியதுபோல, "தாயே உனது தாசனாகிய என் மேல் உனது கருணா கடாக்ஷத்தைச் செலுத்த மாட்டாயா?'' என்று பக்தன் பிரார்த்திக்கும்போது, அவனுக்கு எவ்வளவோ தவம் செய்தும் கிடைக்க முடியாத 'பவானித்வம்'-பவானியுடன் கலந்து பவானியாகவே ஆகிவிடும் பேற்றை தேவி அருள்கிறாள்.



தேவியை சரணடைந்தவர்கள் முதலில் மனதின் மாசுகளையெல்லாம் போக்கிச் சுத்தம் செய்யப்படுகிறார்கள். ஈஷணாத்ரயம் என்ற மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற ஆசைகள், நம்மை என்றென்றும் இந்த சம்ஸார கடலைக் கடக்க முடியாமல் செய்யும். இந்த ஆசைகளை தேவி வேருடன் எரித்து விடுகிறாள். உலக வாழ்க்கையிலேயே உழன்று கொண்டிருக்கும் பல பக்தர்கள், இப்படி எல்லா பந்தங்களும் அதிவேகமாக அறுந்து போகும்போது பேரதிர்ச்சியடைகிறார்கள். இந்தப் பெரிய ரண சிகிச்சையை அவர்களால் தாங்க முடிவதில்லை. இந்த உபாசனையே வேண்டாம் என்று நிறுத்தி விடுகிறார்கள். விவேகமுள்ள சிலர், தேவியின் இந்த முறையைப் பற்றித் தீர்க்கமாக ஆலோசனை செய்து, தனது நன்மைக்காகவே இப்படி உலக பந்தங்களிலிருந்து தனக்கு விடுதலையை தேவி அருள்கிறாள் என்றறிந்து தங்களது உபாசனையை மேலும் தீவிரமாக்கிக் கொள்கிறார்கள். இப்படி இடைவிடாமல் தைல தாரை போல உபாசனை செய்யும்போது பக்தனுக்குக் கிடைக்கும் ஆனந்தத்தை விவரிக்கவே முடியாது.

*(உபாசனா ரகஸ்யம் - கோவை ஹரிஹர சர்மா -பக்.103. ரூ.25/ - பயனீர் பப்ளிகேஷன்ஸ், புதிய எண். 6, (பழைய எண்.33) மூன்றாம் தெரு, கண்ணன் நகர், குரோம்பேட்டை, சென்னை - 44)*

## கலாசாரத்தின் அடையாளம்

"இந்து என்பது மத ரீதியான அடையாளமே அல்ல. இது ஒரு சுவாசத்தின் அடையாளம். சிந்து என்ற சொல்லே மருவி இந்துவாகி, பின்னர் 'ஹிந்து'வாகிவிட்டது. சிந்து சமவெளியில் பிறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் ஹிந்துதான். ஹிந்துவாக இருப்பதற்கு எந்தக் குறிப்பிட்ட நம்பிக்கையையும் கொண்டிருக்க வேண்டியதில்லை. நீங்கள் கடவுள் மீது நம்பிக்கை வைத்து ஹிந்துவாக இருக்க முடியும். நீங்கள் எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து ஹிந்துவாக இருக்க முடியும். ஏனென்றால், இது ஒரு கலாசாரத்தின் அடையாளம். ஆனால், தற்போது ஹிந்து என்பதை கொள்கையாக மாற்றிவிட முயற்சி நடக்கிறது. ஏனென்றால், வெளியிலிருந்து வந்த சில மதங்கள் மூர்க்கத்தனமாய் மக்களை மதம் மாற்றத் துவங்கியதுதான். இதனால் ஏற்பட்ட பாதுகாப்பின்மையால் இந்தச் சமூகம் தனக்குள்ளும் தீவிரமான குழுக்களை உருவாக்கத் துவங்கியிருப்பது வருத்தத்துக்கு உரியது. இந்தச் சமூகத்துக்கு இதுபோன்ற எண்ணம் வந்தே இருக்கக் கூடாது. ஏனெனில், இந்தத் தேசம் எதையும் திறந்த கரங்களோடு வரவேற்று பழகியிருக்கிறது. ஆனால், அப்படி இருந்தால் காணாமல் போய்விடுவோமா என்ற பயத்தில் தங்களை வன்முறைக் குழுக்களாக அமைத்துக்கொண்டு, வரலாற்றில் மற்றவர்கள் அப்போது செய்யாததையெல்லாம் இப்போது இவர்கள் செய்ய முயன்று வருகிறார்கள்" என்று முன்னோட்டமாக விளக்கிய சத்குரு, சாதகர் எழுப்பிய சந்தேகத்துக்குப் பதில் சொல்லலானார்.




*(தியானலிங்கம் குரு தந்த குரு - ப்ரியன் ஸ்ரீநிவாஸன் -பக்.176. விலை குறிப்பிடப்படவில்லை. - ஈஷா அறக்கட்டளை, 15, கோவிந்தசாமிநாயுடு லேஅவுட், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - 641 005)*

இந்தப் பகுதியில் இடம்பெற, பதிப்பாளர்கள் இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்.
முகவரி: ஆன்மிக அலமாரி, ஆன்மிக பலன், 229, கச்சேரி சாலை, மயிலாப்பூர், சென்னை – 600 004